# 7C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. இயல் 7A யிலுள்ள கட்டுரையைப் படித்த பின்னர் தயவாக மீண்டுமொரு முறை மீளாய்வு செய்க. எந்த மூன்று குறிப்புகள் உங்களுக்குச் சிறப்பாக இன்றியமையாதன? குறிப்புகள் எடுக்கவும் பின்னர் இருவர் அல்லது மூவர் கொண்ட அணிகளாக கலந்துரையாடவும்.

2. 7A.4 தொடர்பாக கணிப்பீட்டுச் செயற்பாடுகள்: உருவாக்க, கல்வித்திறன் மதிப்பீடு, சுருக்க மதிப்பீடு ஆகியவற்றுக்கு பா.மொ.க ஆசிரியர் என்ற முறையில் ஒரு கற்றல் தொடரின் முடிவில் உங்கள் நடைமுறைப் பட்டறிவிலிருந்து 1-2 எடுத்துக்காட்டுகள் பற்றி எண்ணுக. உங்கள் தொழில் தோழருடன் உங்களுடைய எடுத்துக்காட்டுகளைக் கலந்துரையாடுக.

3. இயல் 7B யிலுள்ள 2 மற்றும் 3 எடுத்துக்காட்டுகளை தயவாக கண்காணிப்புடன் மீளாய்வு செய்க. அவை கல்வித்திறன் மதிப்பீட்டுக்கான எடுத்துக்காட்டுகளாகும். அடுத்த 2-3 திங்கள்களில் உருவாக்கக் கணிப்பீடு தொடர்பாக நீங்கள் என்ன செய்யலாம் என உருவாக்கல் செய்க மற்றும் கலந்துரையாடுக. வேறுபட்ட அகலைவக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகளைத் தேடி அவற்றை உங்கள் வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

4. இயல் 7A.5 வகுப்புத் தோழர்களுடைய செயற்றிறன் மதிப்பீடு பற்றி விவரிக்கின்றது (பள்ளித்தோழர் கணிப்பீடு மற்றும் பின்னூட்டல்). இவ்வடிவ மதிப்பீட்டில் உங்களுக்கு ஏற்கெனவே பட்டறிவுகள் உண்டா? அடுத்த 2-3 திங்கள்களில் இச்சூழ்நிலையில் நீங்கள் என்ன முயற்சிகள் செய்யலாம்? குறிப்பிட்ட நிகழ்வுகளைத் திட்டமிடவும்.

5. இயல் 7A.6 தனிப்பட்ட, புறநிலை, சமூகக் குறிப்புத் தரநிலைகள் பற்றி விளக்குகிறது. ஒவ்வொரு குறிப்புத் தரநிலைக்கும், உங்களது வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து தயவாக ஒரு மதிப்பீட்டுச் செயல்முறை ஒன்றினைக் கண்டுபிடித்து கலந்துரையாடுக (அதாவது, தனிப்பட்ட / சமூக / புறநிலைக் குறிப்புத் தரநிலை நடுநிலை இன்றியமையாமைக்கு ஒன்று அல்லது பல எடுத்துக்காட்டுகள்).

6. சுய மதிப்பீட்டு இயலுமையை முன்னேற்றுதல் குறிப்பாக இன்றியமையாதது. இச் சூழ்நிலையில் தயவாக பின்வருவனவற்றைக் கண்டுபிடித்து கலந்துரையாடுக அ) நிகழ்வுகள், உங்கள் கற்பித்தலில் நீங்கள் பயன்படுத்தியவை, ஆ) அடுத்த கிழமைகளில் அல்லது திங்கள்களில் இதனை நீங்கள் பயன்படுத்தக்கூடிய குறிப்பிட்ட நிகழ்வுகள்.

7. மதிப்பீடுகள் எப்பொழுதுமே வெளிப்படையாக இருப்பதற்கும் மாணவர்களுக்கு நீதியாக இருப்பதற்கும் அடிப்படை நோக்குநிலைப்பட்டதாக இருக்கவேண்டும். தயவாக இயல் 7B யில் எடுத்துக்காட்டு 1இனை மீளாய்வு செய்க. இதே போன்ற பாணியில் நீங்கள் தொடரும் சூழல்களை உருக்காட்டவும் / கலந்துரையாடவும். பல்வேறு அகலைவ நிலைகளுக்கும் குறைந்தது ஒரு குறிப்பிட்ட எடுத்துக்காட்டினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துக.

8. தற்போது நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் பணிசெய்யும் நாட்டு வழமையான பள்ளிகளில் நடைபெறும் மதிப்பீடுகள், திருத்துதல், தரப்படுத்தல் ஆகியன பற்றி என்ன அறிவு உங்களிடம் உள்ளது? கையேடுகள், தகவல் துணைகள் ஆகியன உண்டா (தரவிறக்கக்கூடிய சிற்றேடு சூரிச் கல்வித் திணைக்களத்தின் "மதிப்பீடும் பள்ளித் தொழில் முடிவுகளும்")? வழமையான வகுப்பறைக் கற்பித்தல் தொழில் தோழருடன் இவ்வினாக்கள் பற்றித் தயவாகக் கலந்துரையாடுக. உங்கள் மாணவர்களின் நலனுக்காக, உங்கள் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் ஏறத்தாழ வழமையான வகுப்பறை ஆசிரியர்களின் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுடன் ஒத்திருத்தல் இன்றியமையாததாகும்!

II